Journal of Tamil Studies, eISSN 2116-5507
Volume 1, No.1, 2020, (29-38)

# அற இலக்கியமும் திணைக்கோட்பாட்டு மரபும்

# Ethic Literature and Tradition of Thinnai Theory

Saravanajothi Seetharaman[1]

[1]Assistant Professor, Department of Tamil, Thiagarajar College, Madurai

Saravanajothi_tam@tcarts.in

**ஆய்வுச்சாரம்:** இவ்வாய்வின் முதன்மை நோக்கம் சங்க இலக்கியத்தில் காணப்படும் நில அமைப்புச் சார்ந்த திணைக் கோட்பாடு, அற இலக்கியங்களிலும் காணப்படுவதை ஆராய்வதாகும். இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அடிப்படையில் ஒப்பீடு மற்றும் விளக்கமுறை அணுகுமுறை கையளாப்பட்டுள்ளன. சங்க கால திணைக்கோட்பாடு சூழலியல் பின்புலம் சார்ந்தது. அற இலக்கியம் திணைக்கோட்பாட்டு சூழலியல் உள்ள மக்களின் ஒழுகலாறுகள் எடுத்துக்கூறப்படுகிறது. சங்க கால மக்கள் சுற்றுச்சூழல் அடிப்படையிலான வாழ்க்கையுடன் வாழ்ந்ததைக் காட்டுகிறது. எனவே அவர்கள் சங்கக் கவிதைகளில் இயற்கையை மையப்படுத்தினர். அந்தக் காலத்திற்குப் பிறகு, மக்கள் மதங்களால் வழிநடத்தப்படுகிறார்கள், எனவே நெறிமுறை இலக்கியங்கள் ஒழுக்கத்தை மையப்படுத்தின. சங்க கால திணை இலக்கிய நீட்சி அற இலக்கியங்களிலும் ஒழுக்க மரபுப் பின்புலத்தில் தொடர்கிறது என்பதை ஆய்வாளர் உறுதிசெய்கின்றார்.

**கருச்சொற்கள்:** அறம், திணை இலக்கியம், இலக்கியம், ஒழுக்கம், மதம், அற இலக்கியம்

***Abstract:*** *The major objective of the research is to how the Ethic literature portrait the Thinai theory which is also in Sangam literature. Sangam literature describe the poems' theme with the background of the Nature. But Tamil Ethic literatures focus the theme only not about the landscape. Ethic literatures teach the morality to the people. This research is based on qualitative method. Descriptive and Comparative analysis approaches have been used for this research. The findings show that Sangam people lived with ecological based life. So, they focused the Nature in Sangam poems. After that period, People guided by religions, so Ethic literature focused the morality.*

***Keywords:*** *Ethic, Sangam Poems, Literature, Morality, Religion, Ethic literature.*

## அறிமுகம்

திணை இலக்கிய கவிதைகளைத் "தமிழ் இலக்கிய வரலாற்றை ஆதாரமாகக் கொண்டு காலங்களைச் சங்க காலம் முதலாக வகுத்தல் போல, தமிழ் மக்கள் சிந்தனையை ஆதாரமாகக் கொண்டு காலத்தை வகுப்போமாயின், சங்க காலம் என வழங்கும் காலப் பிரிவை இயற்கை நெறிக்காலம்" என்று (ஆ.வேலுப்பிள்ளை, தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும் 1985) குறிப்பிடப்படுகிறது. இதற்கு அடிப்படைக் காரணம் சங்க கால மக்களின் வாழ்வியல் நெறியாகும். திறனாய்வாளர்கள் திணைக் கோட்பாட்டிற்கு வரையறை செய்கிறபோது, " நடுவன் ஐந்து திணை" என்று தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் 'அவற்றுள், நடுவன்

ஐந்திணை நடுவணது ஒழியப் படுதிரை வையம் பாத்திய பண்பே' (அகத்திணையியல், நூற்பா, 948.) முதல்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகும். மேலும் தொல்காப்பியம், பொருளதிகாரம், 'கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய் முற்படக் கிளந்த எழுதிணை என்ப' (அகத்திணையியல், நூற்பா, 947) என்ற அகத்தினை மரபுகள், புறத்திணை மரபுகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு' திணைக் கோட்பாட்டு புரிதலைக் கட்டமைக்கின்றனர். சான்றாக, "பல்வேறு நிலப்பகுதிகளாக இனம் காணப்படுகின்ற திணைகளை அடிப்படையாகக் கொண்டது திராவிடக் கவிதையியல். இது இலக்கியத்தை இரு முதன்மைப் பிரிவுகளாகக் காண்கிறது. மனம் சார்ந்த, தனிநபர் சார்ந்த உணர்ச்சிக்கு முதன்மையளிக்கிறது, தன்னுணர்ச்சிக் கவிதைக் கூறுகள் மிக்க அகம் கவிதைகள் ஒரு பிரிவின; புறவயமான சமூகத்தன்மை கொண்ட, விளக்கத்தன்மை கொண்ட கதையாடல் கூறுகள் மிக்க புறம் கவிதைகள் மறுபிரிவின இவற்றுக்கு அடிப்படையான திணைகள் முறையே அகத்திணை என்றும் புறத்திணை என்றும் வழங்கப்படுகின்றன என்று கெ.அய்யப்ப பணிக்கர் எடுத்துரைக்கிறார் (திணைக்கோட்பாடும் தமிழ் ஆய்வுச்சூழலும் 2018).

சங்க இலக்கியத்தைத் திராவிடக் கவிதையியல் என்று கூறுவது இக்கட்டுரையின் அடிப்படையானதாகக் கருதுகிறேன். மூவேந்தர்கள் ஆண்ட நிலப்பகுதி, இந்நிலப்பகுதிக்குள் உருவான கவிதை அமைப்பு இவற்றை திராவிட கவிதை மரபாக உள்வாங்கிக்கொண்டார் என்பதாக கெ.அய்யப்ப பணிக்கரின் கருத்தியலை நான் உணர்கிறேன். திராவிடக் கவிதை மரபு என்ற சொல்லாடலுக்குள் சங்க கவிதையைக் கட்ட முயற்சிப்பதற்கு முன்னால் திராவிட மொழிகளுக்குள் மூத்தது, முதன்மையானது தமிழ் என்ற நிலைப்பாட்டில் நின்றுகொண்டு திராவிடக் கவிதையியல் என்பது சங்க கவிதை என்பதாக உணரவேண்டும். எனவே, திணைக் கோட்பாடு என்பது வாழ்விட சூழலுக்கு ஏற்ப கற்பனை உணர்ச்சியைக் கவிதை பொருண்மையில் தொடர்புப்படுத்திக் கூறுதல். இவ்விதத் தொடர்பில் இயற்கைக்கும் மனிதனுக்குமான உறவு இலக்கியப் பின்புலத்திற்கும் பொருண்மைக்குமான உறவின் வழியே வெளிப்படுதல் வேண்டும். இவ்வித கருத்தின் வழிப் பார்த்தோமானால் ஒரு இலக்கியம் உருவான சமூக வாழ்வியல் ஒழுகாறுகள், சூழலியல் போன்றவை இலக்கிய புனைவுகளுக்குப் *(Back drop)* பின்னணிகளாக வரும். சங்க கவிதையைப் பொறுத்த வரை நிலம், பொழுது, நிலத்திற்குரிய ஒழுக்கம், கருப்பொருள் என்பவவை திட்டவட்டமாக வரையறைப் படுத்தப்பட்டு இருந்தது. ஆனால், பிற்கால கவிதை மரபு குறிப்பாக அற இலக்கிய கவிதை மரபு சூழலியல் பின்னணி என்பது வரையறுக்கப்பட்டது அல்ல. சங்க மருவிய காலம் என்று இலக்கிய வகைமைப் படுத்துகிற காலக்கட்டத்தில் உருவான இலக்கியங்கள் அக இலக்கியம், அற இலக்கியம், புற இலக்கியம் என்ற வகைப்பாட்டில் கட்டமைக்கப்பட்டிருப்பது காணமுடிகிறது. எனவே, இங்குத் திட்டவட்டமான நிலவியல் கூறுகள் கவிதை மரபில் பின்னப்படவில்லை. அதற்கு மாறாக சங்க மருவிய கால சமூகச் சூழலியல் கருப்பொருளாகவோ, ஒழுக்கமாகவோ பின்னப்பட்டிருப்பதைக் காணமுடியும். சான்றாக,

‘வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு’ (குறள் – 595)

என்ற கவிதை, தண்ணீரின் அளவுக்கு ஏற்ப மலரின் வேர் நீட்டம் கொள்ளும் அதுபோல மாந்தர்களின் ஊக்கத்திற்கு ஏற்ப வாழ்க்கையில் உயர்வு பெறுவர். இக்கவிதையின் கருத்தியியல் மாந்தரின் வாழ்க்கை முறையைக் கற்றுத்தருகிறது. இதன் பின்னணியாக (*Back drop)* நிலவியல் சூழல் பொருத்திக்காட்டடப்படுகிறது. எனவே, அற இலக்கிய மரபில், சூழலியல் மறைபொருளாகப் பின்னப்படுவதை உணரமுடிகிறது. இத்தகைய பின்புலத்தில் அற இலக்கியத்தில் காணப்படும் திணை மரபினை ஆராய முற்படும் போது,

1. வள்ளுவரும் திணைக்கோட்பாட்டு மரபும்
2. சமண நூல்களில் திணை மரபு
3. வைதீக நூல்களில் திணை மரபு
4. திணை மரபு நீட்சியும் பதினெண் கீழ்க்கணக்கு அகப், புற நூல்களும்.

## ஆய்வு முன்னோடிகள்

தமிழ் இலக்கியங்களில் திணைக்கோட்பாடு என்று பல்வேறு அறிஞர்களால் ஆராய்ந்து கட்டுரைகளும் நூல்களும் எழுதப்பட்டுள்ளன. பெரும்பாலும் திணைக்கோட்பாடு சங்க இலக்கியத்தை வைத்து மட்டும் எழுதப்பட்டுள்ளன. ஆனால் அற இலக்கியங்கள் என்று அழைக்கப்படுகின்ற பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் திணைக்கோட்பாடு இதுவரை பொருத்திப் பார்க்கவில்லை. தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களும் திணைக்கோட்பாடும் (இராமர், 2018) என்ற நூலின் மூலம் திணைக்கோட்பாடும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களும் எனும் கட்டுரை வெளிவந்துள்ளது. இந்நூலில் திருக்குறள், நாலடியார், பழமொழி நானூறு, ஏலதி, சிறுபஞ்சமூலம் ஆகிய நூல்களில் திணைக்கூறுகள் என்று எடுத்துரைக்கப்பட்டுள்ளன. திணைக்கூறுகள் என்பது முதல், கரு, உரிப்பொருள் என்ற அடிப்படையில் பகுத்து ஆராயப்பட்டுள்ளன.

கார்த்திகேசு (2010) அவர்களால் பண்டைத்தமிழ்ச் சமூகம் எனும் நூல் வெளிவந்துள்ளது. இந்நூல் சங்க இலக்கியத்தை முழுமையாக திணைக்கோட்பாட்டு வடிவில் எடுத்துரைக்கப்படுகிறது.

தமிழண்ணல் (2009), சங்க மரபு என்ற நூலின் மூலம் திணைச்செய்யுளின் தோற்றமும் வளர்ச்சியும் என்ற கட்டுரையின் வழி திணை இலக்கியங்களின் வரலாறு எடுத்துரைக்கப்படுகிறது.

வேலுப்பிள்ளை (1985) அவர்களால் தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும் என்ற நூலில் பதினெண்கீழ்கணக்கு நூல்களை அற இலக்கிய நெறி என்பதாக முதன் முதலில் எடுத்துரைக்கப்படுகிறது.

திணை இலக்கிய வளர்ச்சி குறித்துப் பல்வேறு நூல்கள் தோன்றியிருக்கின்றன. இவற்றில் முதன்மையாகக் கருதப்படுவது மேற்கூறப்பட்ட ஆய்வுகள் ஆகும். அற இலக்கியத்தில் அமைந்துள்ள பொருண்மைகள் திணை இலக்கிய நீட்சி என்பதை எடுத்துரைப்பதாக ஆய்வாளர் கூறுகிறார். பொருண்மையின் பின்னனியில் இதுவரை விரிவாக ஆராயப்படவில்லை என்பதால் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

## ஆய்வு நெறி முறைகள்

இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. நூலாய்வில் ஆய்வுக்குத் தேவையான நூல்கள், கட்டுரைகள், தேர்ந்தெடுக்கப்பட்டு விளக்கமுறை அணுகுமுறையில் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. மேலும், ஆய்வாளர் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் மனிதவள மேம்பாடு என்னும் தலைப்பில் ஆய்வு செய்துள்ளமையால் தரவுகள் சேகரிப்பதில் தெளிவு உள்ளது என்பதைப் புரிந்து கொள்ளலாம். எனவே, தரவுகள் முழுமையாகச் சேகரிக்கப்பட்டு நிரல் படுத்தப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டன.

## திணைக்கோட்பாடு என்பது என்ன?

திணைக் கருத்தோட்டமானது சங்க இலக்கியங்களில் இருந்து பார்க்கப்படுகிறது. இதனைக் கார்த்திகேசு (1985) "வட்டார, சமூக பொருளாதார விளக்கமாகப்" பார்க்கிறார். சங்க இலக்கியத்தை இவ்வாறு பார்ப்பதற்கு அடிப்படைக் காரணம், ஐந்து வகை நில அமைப்பு, இந்நில அமைப்பில் வாழும் மக்களின் ஒழுங்குபடுத்தப்பட்ட வாழ்வியல், ஒவ்வொரு நிலத்திற்கும் தீர்மானிக்கப்பட்ட ஒழுக்கம், இந்நிலத்தில் வாழும் உயிரினங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிலத்திற்கு வரையறுக்கப்பட்டவையாகும். எனவே, திணை அமைப்பில் வாழ்ந்த மக்கள் பொருளாதார குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, நிலத்திற்கு ஏற்ற தொழில் முறைகளைச் செய்து வந்தனர். திணை எனும் சொல்லிற்குப் பொருள் உரைக்கும் பிங்கல நிகண்டு,

" குலம்நிலம் ஒழுக்கமுந் திணையே" (பிங்கல நிகண்டு – 3641)

எனப் பொருள் விளக்கம் செய்யும். இதனால், "திணை என்ற சொல் ஐந்திணையை மட்டும் சுட்டி நிற்கவில்லை மாறாக குலம், நலம், ஒழுக்கம் ஆகிய மூன்றும் இணைந்து நிற்கும் தன்மையையும் திணை எனக் கருதப்பட்டுள்ளது தெளிவாகின்றது. இங்கே குலம் என்பது குலத்திற்குரிய மக்கள்

எனப் பொருள்படும். இதனால், மக்களின் வாழ்வியல் வாழ்வியலோடு தொடர்புடைய நிலப்பகுதி - வாழ்வியலும் – நிலச்சூழலும் இணைவதால் வெளிப்படும் நெறிமுறைகள், நெறிமுறைகளை வகுக்கின்ற எண்னப்போக்கு ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியதாகத் திணைக் கருதப்பட்டது என்பது தெளிவாகும்" (சக்குபாய், 2007). இதனைப், பாமயனின் கருத்து வழி க.நெடுஞ்செழியன் விளக்க முற்படும்போது, "இன்று மிக முன்னணியில் இயங்கிக் கொண்டிருக்கும் ஓர் அறிவியல் சூழலியல் (Environment Science) என்ற ஓர் இயல் முகிழ்த்துள்ளது. இதன் ஒரு பிரிவாகத் திணைமவியல் (Ecology) என்ற துறை வளர்ந்துள்ளது. இது இப்போது ஒரு மெய்யியலாகவும் விவரிக்கப்பட்டுள்ளது.

ஆங்கிலம் பெரும்பாலும் தனது வேர்ச்சொல் போதாமையைச் சீர்செய்து கொள்வதற்காக, இலத்தின் கிரேக்கம் முதலான மொழிகளில் இருந்து சொற்களை வாங்கிக்கொள்ளும். அப்படி உருவான ஒரு சொல்லாக Ecology அமைந்துள்ளது. OIKOS என்பதற்குக் கிரேக்கத்தில் வாழிடம் வீடு என்று பொருள். இவ்விரண்டு சொற்களும் கூடி Ecology என்ற சொல் உருவாகியுள்ளது. ஆனால், இன்றைய அறிவியல் இச்சொல்லிற்கு விளக்கமளிக்கும் வகையில் ஓர் உயிரினத்திற்கும் அதைச் சுற்றி இருக்கும் சுற்றுப்புறத்திற்கும் உள்ள உறவை (ஒழுகலாற்றைப்) பற்றிய படிப்பு திணைமவியல் (Ecology) என்று கூறுகிறது. ஆனால், அந்த ஆங்கிலச் சொல்லில் அதன் முழுப்பருமானமும் வெளிப்படவில்லை.

அதே சமயம் திணை என்ற தமிழ்ச் சொல்லிற்கு 'வாழிடம்' என்பதோடு மட்டுமில்லாது 'ஒழுகலாறு' எனும் மற்றொரு ஆழமான பொருள் உள்ளது. இன்றைய புதிய (Modern) அறிவியல் கூறும் விளக்கத்தை உள்ளடக்கியதாகத் திணை என்ற சொல் இருப்பதைக் கண்டு வியக்காமல் இருக்க முடியவில்லை என்று பாமயனின் கூற்றாக நெடுஞ்செழியன் (சங்க இலக்கிய கோட்பாடுகளும் சமய வடிவங்களும் 2007). குறிப்பிடுகிறார். இக்கருத்தானது, திணை இலக்கிய மரபினை அற இலக்கியங்களைப் பொருத்தி ஆராய்கிற ஆய்வாளர்களுக்கு வலிமையான ஆதாரமாக எடுத்துக்கொள்ளலாம். ஆனாலும், கார்த்திகேசு (2010) தருகின்ற விளக்கமானது, "சங்க காலத்திற்குப் பின் திணைக் கண்னோட்டமானது, இலக்கிய மரபாக இல்லாமல் மாறிவிட்டது. ஆனால், 'திணை' கவி மரபாகி, வாழ்க்கையிலிருந்த தொடர்பு நீங்கி வறண்டு போய்விட்டது. ஆனால், இக்கருப்பொருள் கலித்தொகையில் கையாளப்படும் முறையிலிருந்தே இதனை அறிந்து கொள்ளலாம். பாலை, குறிஞ்சி, நெய்தல் கவிதைகளில் இந்நிலங்களின் வாழ்க்கை முறைகளை வருணிப்பதை விட இந்நிலங்களோடு தொடர்புடைய உணர்ச்சிகளையே கவிஞர்கள் முக்கியத்துவப்படுத்துகிறார்கள். குறிஞ்சிக்கலியில், தலைவன் காட்டின் உரிமையாளன் ஆவான் (கலித்தொகை, 48.).

இதற்கான காரணத்தை ஆராய்வது கடினமல்ல. சங்க காலத்தின் அழிவிற்கு பின்னர் அரசியல் ஆதிக்கத்தின் தன்மை மாறியது. பேரரசுகளின் விரிவு, வெளிநாட்டு ஆதிக்கத்தின் இடையீடு, பிராமணியத்தின் செல்வாக்கு ஆகியவற்றின் காரணமாக மருதம் தவிர்த்த ஏனைய நிலங்கள் படிப்படியாக மறைந்து பின்னிலைக்குச் சென்றன. இந்நாடு பற்றிய வள்ளுவரின் (திருக்குறள் - 731) விளக்கம் இதனைத் தெளிவாகக் குறிப்பிடுகிறது. குறைவில்லாத

விளைச்சலைத் தரும் வளமான நிலமும், அறிவாற்றல் மிக்க அறிஞரும், மிகுதியான செல்வம் உடையவரும் உடையதே நாடு என்று அவர் நாட்டிற்கு இலக்கணம் வகுக்கிறார். இவ்விளக்கம் வளர்ச்சியடைந்த வேளாண்மை நிலப்பகுதிகளை வலியுறுத்தானது, இனக்குழு மக்கள் நாட்டின் எல்லைக்குள் இருக்கக்கூடாது என்பதனை வெளியிடுகிறது" (கார்த்திகேசு, 2010). இதனால், திணை வாழ்க்கை என்பது திறானாய்வாளர்களின் விவாதப் பொருளாகவும், பழங்கால திணை வாழ்க்கைப் பற்றி போலிக் கவிதைகள் எழுதவுமே பயன்பட்டது என்று மேலே குறிப்பிட்ட நூலில், சிவத்தம்பி அவர்கள் திணை வாழ்க்கை குறித்த அழிவினை கோபமாகப் பதிவிடுகிறார். சிவத்தம்பியைப் பொறுத்தவரை திணை மரபு சங்க காலத்திற்குப் பின் இல்லை என்பதாகும். பாமயன், நெடுஞ்செழியன் போன்றோர் திணை என்பது சூழலியல், ஒழுகலாறுகள் என்ற கருத்தியலை முன் வைக்கின்றனர்.

## அற இலக்கியத்தில் திணைச் சமூக உருவாக்கப் பின்புலம்

ஓர் இலக்கியத்தின் கருத்தியல், இலக்கிய வடிவம், இலக்கியப் பின்புலம் (Back drop) என்பவை தானாக முகிழ்ப்பது கிடையாது. அந்தக் கால சமூகச் சூழலே இலக்கியத்தின் தன்மையாக மிளிர்கிறது. இந்த வகையில் அற இலக்கியம் தனக்கான வடிவத்தையும் பாடுபொருளையும் பின்னணியையும் தன் கால சமூகச் சூழலில் பெற்றுக்கொண்டது (வேலுப்பிள்ளை, 1985). வேலுப்பிள்ளை (1985), தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும் என்ற நூலில் மக்கள் புறநானுற்றுக் கால வாழ்க்கை முறையிலே திருப்தியடைந்தவர்களாக இருந்திருந்ததால் புதுமையே ஏற்றிருக்க மாட்டார்கள். தம்முடையவும் தம்முன்னோருடையவும் வாழ்க்கை முறையில் அதிருப்தி ஏற்பட்டிருக்காவிட்டால், புறநானூறு தோன்றிய தமிழ் நாட்டில் திருக்குறள் தோன்றியிருக்க முடியாது. அரசாள்வோரில் ஏற்பட்ட மாற்றம் மட்டும் மக்கள் வாழ்க்கையை அதுவும் நிறுவனங்கள் முதலியன வளர்ச்சியடையாத பூர்வீகச் சமுதாயத்தில் பெறுமாற்றமுறச் செய்திருக்க முடியாது. சங்ககால வாழ்க்கை முறையில் காணப்பட்ட குறைபாடுகளால் மனம் நொந்த மக்களுக்கு வேறு வாழ்க்கை முறை தேவைப்பட்டது. பொறியாலும் புலனாலும் கவர்ச்சியுற்று காதல் வாழ்க்கை, வீரவாழ்க்கைகளில் ஊக்கம் மேலிட்டு நின்று வாழ்ந்து அவ்வாழ்க்கைகளில் துன்பத்தைக் கண்ட தமிழ் மக்கள் கட்டுப்பாடுகள் நிறைந்த வாழ்க்கையையும் ஒழுக்கத்தையும் அவாவினர் (வேலுப்பிள்ளை, 1985). காதலும் வீரமும் ஊக்கமாக நினைத்து வாழ்ந்த மக்கள், அறமும் ஒழுக்கமும் நிறைந்த வாழ்க்கை பெரிது என கருதப்பட்ட சூழல் அற இலக்கிய காலமாகும்.

காதலும் வீரமும் திணை வாழ்க்கையின் அடிநாதமாக கருதப்பட்டது. அறமும் ஒழுக்கமும் ஊக்கம் பெற்ற காலத்தில் திணை வாழ்க்கையின் அடிநாதம் புறந்தள்ளப்படுகிறது. திணைச் சமூகத்தில் காதலும் வீரமும் மையக்கரு (Motif - முதல், கரு, உரிப்பொருள், சூழலியல்). ஆனால், அற இலக்கியத்தில் அறம் ஒழுக்கம் என்பதில் அறம் காதலாகவும், ஒழுக்கம் வீரமாகவும் மையக்கரு (Motif) கட்டமைக்கப்படுகிறது. சான்றாக,

‘அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இதுகேள்! மண்ணுயிர்க் கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் இல்லது
கண்டதில்’ (மணிமேகலை, மர்ரே பதிப்பு – 25: 228)

இந்தப் பாடலின் பொருள் தான் அற இலக்கியங்களின் மையக்கரு அல்லது திணைக்கோட்பாடு. சங்க கால திணைச் சமூகத்தின் காதலுக்குள்ளும் வீரத்திற்குள்ளும் அன்பும், உணர்வும் பரிதவித்ததை, ஆற்றுப்படை நூல்களும் நெடுநல்வாடை போல் அமைந்த காதல் பாடல்களிலும் இடம்பெறுவதைக் காணலாம். இதன் எதிர் அசைவைத்தான் திருக்குறள் முதல் மணிமேகலை வரை காணமுடிகிறது. எனவே, அற இலக்கியத் திணைக் கோட்பாடு என்பது உணவு, உடை, இருப்பிடம் பெறுவதற்கான வரையறையை ஒழுகலாற்றைக் கட்டமைப்பதில் இலக்கியம் வடிவமைக்கப்படுகிறது.

**வள்ளுவரும் திணைக்கோட்பாட்டு மரபும்**

சங்க காலத்தில் “ஒரு பெண் முதல் நாள் போரில் தந்தை, இரண்டாம் நாள் போரில் கணவன், அடுத்த நாளும் போர் தொடங்குகிறது தன்னுடைய சிறுவயது மகனைப் அனுப்புகிறாள்” (புறநானூறு பாடல் - 279). இது திணைச் சமூக விழுமியமாகக் கட்டமைக்கப்படுகிறது. இதைப்போல் அற இலக்கிய சமூகத்தின் அடி நாதமாக இருக்கக்கூடிய உணவு, உடை, இருப்பிடம் பெறும் தூய்மையான வழிமுறைகளைக் கட்டமைப்பதில் திருக்குறளின் அதிகாரங்கள் அமையப்பெற்று இருக்கின்றன. அன்புடைமை, இனியவைக்கூறல், செய்நன்றியறிதல், நடுநிலமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை (இவைப் போன்றும் இன்னும் பல..) இவையெல்லாம் கடைசி நாள் போரில் தன் சிறுவயது மகனை அனுப்பி பெருமிதம் கொண்ட சங்க காலத் தாய் போல், வள்ளுவர் காலத் திணைச் சமூகம் ஒழுகலாறு அடிப்படையில் கட்டமைக்கப்படுகிறது.

சங்க கால வாழ்வியலில் நிலப்பரப்புகளின் பெயரால் (குறிஞ்சி முதல் பாலை வரை) திணைச் சமூகம் என்றனர். வள்ளுவர் வகைப்படுத்தும் திணைச் சமூகத்தில் நிலப்பெயர்கள் இல்லை நிலவியலோடு இணைந்த மனித சமூகத்தைக் காணலாம். சான்றாக,

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர் (திருக்குறள் – 1033)

சங்க காலத்தில் உழவு ஒரு நிலமாகவே (மருதம்) இருந்தது. வள்ளுவரோ உழவுக்குப் பின்னால்தான் ஏனைய நிலம் உள்ளது என்றார். “செம்புலப் பெயல் நீர் போல அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே” (குறுந்தொகை பாடல் - 40) என்று இல்லறம் கற்பிக்கப்பட்டது. வள்ளுவர்,

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது (திருக்குறள் – 45)

அன்பால் கலந்தது சங்க வாழ்க்கை என்றால், அன்புடன் நற்செயல்கள் செய்து வாழ்க்கையைப் பண்புடையதாககும் பயனுடையதாகவும் ஆக்க வேண்டும் என்கிறார்.

வள்ளுவர் கட்டமைக்கும் திணைக்கோட்பாட்டு மரபு விணைத்தூய்மை, விணைத்திட்பம், விணை செயல்வகை என மூன்றாக வகைப்படுத்தலாம். திணைச் சமூகம் ' வினையே ஆடவர்க்கு உயிர்' என்றது. வினை எப்படி அமைய வேண்டும் என்பதைக் கட்டமைப்பதிலே திருக்குறள் முழுமையும் அமைந்துள்ளது. இது தினைச் சமூக வாழ்வியல் முறையின் நீழ்ச்சி.

## சமணநூல்களில் திணை மரபு

அற இலக்கியத்தில் சமண இலக்கியமாக கருதப்படுவது, நாலடியார், பழமொழிநானூறு, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி ஆகியவை அடங்கும். நாலடியார், பழமொழிநானூறு இரண்டும் திருக்குறள் பின்பற்றும் வாழ்வியல் முறையை எடுத்துக்கூறுகிறது. இருப்பினும் இவ்விரண்டு நூல்களும் எடுத்துரைப்பியலே வெவ்வேறு விதமாக முன் வைக்கின்றன. அவை:

1. சமண தத்துவமுறையில் பொருள் சேர்க்கும் முறை, பயன்படுத்துகின்ற ஒழுக்கம், என்று வரையறை செய்து எடுத்துரைக்கிறது நாலடியார்.
2. பொது மக்களால் காலம் காலமாக பின்பற்றப்படும் வாழ்வியல் என்பதாக பழமொழிநானூறு எடுத்துரைக்கிறது.

மேலும் சிறுபஞ்சமூலம், ஏலாதி இரண்டு நூல்களும் உடல் ஆரோக்கியத்திற்கு முக்கியத்துவத்தைப் பெறும் மருந்து போல் அறநெறி கருத்தியல்களை முன்வைக்கின்றன. ஐந்து மருத்துவ குணம் கொண்ட வேர்கள் போல் ஐந்து கருத்தியல் கொண்ட வாழ்வியல் அறநெறி கோட்பாட்டியலாக முன்வைக்கப்படுகிறது. சான்றாக,

உடம்பொழிய வேண்டின் உயர்தவம் ஆற்றுஈண்டு
இடம்பொழிய வேண்டுமேல் ஈகை – மடம்பொழிய
வேண்டின் அறிமடம் வேண்டேல் பிறர்மனை
ஈண்டின் இயையுந் திரு (சிறுபஞ்சமூலம் பாடல -6)

என்பதன் மூலம், நீ இருக்குமிடம் இந்த உலகத்தில் புகழால் நிறைய வேண்டுமானால் வறியவராய் வந்து இரப்பவர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுப்பாயாக. மென்மையான ஈரம் தன்னுள் நிறைய வேண்டுமானால் மற்றவர் மனைவியை விரும்பாது ஒழிக. இவையெல்லாம்

பொருந்துமாயின் செல்வம் வந்து தானே நிறையும். இவ்வாறு சமண இலக்கியங்கள் தண்ணுடைய கோட்பாட்டியலை முன்வைக்கின்றன.

## வைதீக திணைக்கோட்பாட்டு மரபியல்

அற இலக்கியத்தில் வைதீக இலக்கியம் என்பது பெரும் பங்கு வைக்கின்றன. நான்மணிக்கடிகை, இனியவை நாற்பது, இன்னா நாற்பது, திரிகடுகம், ஆசாரக்கோவை ஆகிய நூல்களை உள்ளடக்கலாம். வைதீகம் என்பது மதம், சமயம் என்பதையும் தாண்டி வாழ்வியல் முறை எனலாம். வேதங்கள், உபநிடதங்கள் முதன்மையாக் கொண்டது. உருவ வழிபாடு, இயற்கை வழிபாடு என எல்லா வழிபாட்டையும் ஏற்றுக்கொண்டது வைதீகமாகும். சான்றாக,

அந்தணரின் நல்ல பிறப்பில்லை என்செயினும்
தாயின் சிறந்த தமரில்லை யாதும்
வளமையோ டொக்கும் வனப்பில்லை எண்ணின்
இளமையோ டொப்பதூஉம் இல் (நன்மணிக்கடிகை, பாடல் -35)

இந்தப் பாடல் மூலம் வைதீக கோட்பாட்டு வாழ்வியல் மிகத் தெளிவாக காணமுடிகிறது. அந்தணர் போல் நல்ல பிறப்புடையவர் யாருமில்லை. பிறர் என்ன உதவி செய்தாலும் தாயைப் போன்று உறவினர் யாருமில்லை. சிறிதும் செல்வத்துக்கு ஒப்பான அழகும் வேறு இல்லை. இதைப்போல் எல்லா இன்பங்களையும் அனுபவிப்பதற்குரிய பருவம் இளமை போல் வேறு இல்லை.

வைதீக கோட்பாட்டியலில் ஒரு குறிப்பிட்ட இனம் முதன்மை படுத்தப்படுகிறது. அடுத்து குடும்ப உறவுகளின் புனித தன்மை, பொருள் இன்றியமையாமை, இளமை முதன்மையானது. வைதீகம் திணைக் கோட்பாட்டியலை வடிவமைத்த விதம் என்பது வேதங்கள் முன்னிறுத்தும் வாழ்வியல் நெறி பின்பற்றுவதாக அமைந்தது.

## திணை மரபு நீட்சியும் பதினெண் கீழ்க்கணக்கு அகப், புற நூல்களும்

அற இலக்கியக் காலக்கட்டத்தில் அக நூல்களும் புற நூல்களும் சங்க இலக்கிய வடிவத்தையை மேற்கொண்டன. திணை, துறை என்ற அமைப்பில் இந்நூல்கள் அமைந்தன. திணை மாலை நூற்றைம்பது, திணைமொழி ஐம்பது, கார் நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, களவழி நாற்பது இவை அனைத்தும் வடிவத்திலும் எடுத்துரைப்பியல் முறையிலும் சங்க இலக்கியம் போன்றே அமைந்தன.

**முடிவுரை**

திணைக் கோட்பாட்டு மரபு என்பது ஐந்து நிலப் பாகுபாட்டின் பின்னணியில் கட்டமைக்கப்பட்டது. சூழலியல் திணைக் கோட்பாட்டின் முக்கியப் பண்பாகும். மக்கள் வாழ்வியல் சூழலியலோடு பின்னிப்பிணைந்தது. இத்தகு சூழலியிலை உள்வாங்கிக்கொண்ட அற இலக்கியம் மக்கள் வாழ்வியலுக்கான கோட்பாட்டியலை முன்வைத்தது. வள்ளுவர் கட்டமைக்கும் வாழ்வியல் முறை, சமணர்கள் கட்டமைக்கும் வாழ்வியல் முறை, வைதீக கட்டமைக்கும் வாழ்வியல் முறை என்ற அடிப்படையில் அற இலக்கிய திணைக் கோட்பாட்டு மரபினைக் காணமுடிகிறது.

## REFERENCES


Dhuraisamibillai., Avai., S. (1996). ***Puranaanuru***, Chennai:Kalaga veliyidu.
Ilampuranar,***Tolkappiyam porulathikaram,*** (1971). Chennai: Kalaga veliyidu.

Karthikesu sivathambi (2010), ***pandai Tamil samukam,*** Chennai: New Century Book House.

Ramar, S. (2018). ***Thinai kotpadukalum thamil ayvu suzhalum,*** Madurai: Biral veliyidu.
Ramar, S. (2018). ***Tamil seviyal ilakkiyankalum thinai kotpadum,*** Madurai: Biral veliyidu.

Sakkubai,Dr., R., (Editor), Nedunjseziyan. K., (2007). ***Sanga ilakkiya kotbadukalum samaya vadivangkalum,*** Chennai: Manithan pthippkam.

Somasundaranar., Po., ve., (1961). ***Kurunthogai,*** Chennai: Kalaga veliyidu,

Thamizannal, (2009). ***Sanga marapu***, Madurai: Sinthamani pthippagam.

Thaninayagam adigal, Puranasanthiran., k., (Transalate), (2014). ***Nila amaibbum tamil kavithaiyum,*** Chennai: New Century Book House,

Thirugnanasambandam., P., (2018). ***Pathinen kilkanakku vadivamum varalaarum,*** Chennai: Neithal publication,

Veluppillai, A. (1985). ***Tamil ilakkiyattil kalamum karuttum,*** munram patippu. Chennai: Pari Puttaka Pannai.